1982 மார்ச் 2]

எடை மற்றும் அளவுகள் சோதனை.

*வினா எண் 211—திரு த. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வியாபாரிகளின் எடை மற்றும் அளவுகள் உரிய அதிகாரிகளால் முன்னறிவிப்பு இன்றி திடீரென்று சரிபார்க்க ‘‘ பறக்கும் படை ’’ ஒன்று அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

[முற்பகல் 9–50]

திரு. த. ஆறுமுகம் : கேள்வி கேட்டு நெடுநாளாகியும் விடை ‘‘ இல்லை ’’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. பலயிடங்களில் வியாபாரிகளின் எடை மற்றும் அளவுகள் குறைவாக இருப்பதால் அது குறித்து திடீரென்று பரிசோதனை செய்ய ஒரு பறக்கும் படை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்போது தொழிலாளர் நல ஆய்வாளர், துணை ஆய்வாளர், உதவி ஆய்வாளர் ஆகியோர் இதுகுறித்து அவ்வப்போது சோதனைகளை நடத்தி நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். தற்போது அரசிடம் ஒரு பறக்கும் படை அமைக்கக்கூடிய அளவிற்கு செயற்குறிப்பு இல்லை என்று சுட்டிக்காட்டினேன். சோதனைகள் நடத்தி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தேவைப்பட்டால் பறக்கும் படை அமைக்கலாம். ஆனால், இதில் முக்கியமானது அதுவல்ல. தற்போது வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ் சட்டத்தில் இதுபோன்ற தவறு இழைக்கின்றவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை மிகக் குறைவாக இருப்பதால் சட்டத்திருத்தம் கொண்டுவந்து கடுமையான தண்டனை கொடுக்க வழிவகை செய்கிறபோது இந்தக் குறைபாடுகளைக் களைய முடியும் என்று அரசு நம்புகிறது.

கூட்டுறவு வளர்ச்சி நிதி.

*வினா எண் 212—திரு சோ அழகர்சாமி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா::

(அ) கூட்டுறவு வளர்ச்சி நிதியில் 1980 ஜூன் 30 முடிய மொத்தம் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) இந்த நிதியிலிருந்து நலிந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் விவரம் யாது ?